Embassy of the United States of America
Colombo

PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20171023T

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட கொமார் நிறுவனத்தின் அங்கமான ஸ்டார் கார்மன்ட்ஸினால் அமைக்கப்பட்ட அதிநவீன வசதிகள் கொண்ட புடவைத்தொழிற்சாலை நிலையத்தின், கடந்த வாரம் நடைபெற்ற திறப்பு விழாவில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். “அமெரிக்க நிறுவனங்கள் மிகச் சிறந்த மற்றும் உயர்தரமான நெறிமுறைகள், வடிவங்கள், புத்தாக்கம், தொழிநுட்பம், பொறுப்புள்ள முகாமைத்துவம் மற்றும் முழுமையாக சுற்றுச்சூழல் பொறுப்புடைமை என்பவற்றை கொண்டு வருகின்றன” என தூதுவர் கேஷப் குறிப்பிட்டார். “கொமார் மற்றும் ஸ்டார் போன்ற நிறுவனங்கள், இங்குள்ள அனைத்து பணியாளர்களும், அரசாங்கமும், இலங்கை மக்களும் எதனை அடைவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப்
ஸ்டார் (Star) ஆடைத்தொழிற்சாலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை
ஒக்டோபர் 20, 2017

இங்கு உங்கள் அனைவரையும் காண்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்!

இன்றைய நாள், இலங்கையில் அமெரிக்க தூதுவராக இருக்கும் எனக்கு ஒரு அற்புதமான நாள். அமெரிக்க நிறுவனங்கள் இங்கு என்ன செயற்பாடுகளை மேற்கொள்கின்றன? என மாண்புமிகு பிரதமர் என்னிடம் வினவியவாறு இருந்தார். அவை இலங்கை மக்களின் வெற்றிகளுக்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பதை அறிவீர்களா?

அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் மூலம், நாடு பூராக வெவ்வேறு இடங்களில் உள்ள நிறுவனங்களில் உள்ள வேறுபட்ட பிரிவுகளில் 30,000 முதல் 40,000 வரையான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள், தேசிய மொத்த உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு வீதங்களில் அதிகளவு பங்களிப்பைச் செலுத்துவதுடன், இலங்கை மட்டுமன்றி அமெரிக்காவின் செழுமைக்கும் பங்காற்றுகின்றன. இங்குள்ள அமெரிக்க நிறுவனங்கள் மேம்பட்ட, உயர் தொழில்நுட்ப பணிகளைக் கையாளுவதுடன், பிரதமர் கூறியது போல் இங்குள்ள வேலைக்கான ஆளணியினர் மிக விஷேடமானவர்கள் ஆகையால், கடந்த சில வருடங்களாக இடம்பெறும் நிகழ்வுகள் மிக விஷேடமானவையாக உள்ளன.

நண்பர்களே, இராஜாங்கச் செயலாளர் டில்லர்சன் நேற்று வாஷிங்டனில் ஆற்றிய உரையில் இந்து சமுத்திர பிராந்தியத்தில், இன்னும் விரிவாக இந்து-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அணுகுமுறை பற்றி குறிப்பிட்டார். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் நீண்ட காலமாக அமெரிக்கா ஒரு சக்தியாக விளங்குவதாக செயலாளர் டில்லர்சன் குறிப்பிட்டார். ஒரு பிராந்தியத்தைக் கட்டுப்படுத்த அல்லது வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்தில் அன்றி, அனைவரும் நன்மை பெறக்கூடிய தீர்வுகளையே நாம் நம்புகின்றோம். உலகளாவிய செயற்பாட்டுப் பொறிமுறையை உருவாக்க அமெரிக்கர்கள் அதிகளவு உதவி மற்றும் முயற்சிகளை வழங்கியுள்ளதுடன், இந்த சட்டங்கள் மற்றும் விழுமியங்கள் மூலம் அமெரிக்காவின் சமாதானம் மற்றும் பாதுகாப்பு மட்டுமன்றி உலகம் பூராகவும் செழுமை மற்றும் ஆரோக்கியத்திற்கு வழிவகுத்துள்ளன.

நண்பர்களே. அமெரிக்க நிறுவனங்கள் மிக உயர் தராதர வடிவமைப்பு, கண்டுபிடிப்பு, தொழில்நுட்பம், பொறுப்புடைய முகாமைத்துவம், மற்றும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்பு பற்றி மேம்பட்ட, உயர் தராதர நெறிமுறைகளை கொண்டுவந்துள்ளன. இந்தப் பூமியிலேயே நிலையான சுற்றுப்புற சூழலைப் பேணும் பொறுப்புக்கு இசைவாக அமைக்கப்பட்டுள்ள சில கட்டடங்களுள் ஒன்றாகிய இந்தக் கட்டடத்தில் நிற்பது அற்புதமாக உள்ளது. கொமர் (Komar) போன்ற அமெரிக்க நிறுவனங்கள் இலங்கை போன்ற நாடுகளில் முதலீடு செய்து பங்குதாரர் ஆகும் போது வழங்கும் தலைமைத்துவத்தினை இது பிரதிபலிக்கின்றது.

மாண்புமிகு பிரதமரே, நீங்கள் மற்றும் ஜனாதிபதி அவர்கள் அடைய நினைக்கும் தொலைநோக்கு தொடர்பாக நாம் பெருமளவு நம்பிக்கை கொண்டுள்ளோம். உங்களுக்கு வாக்களித்த மக்களின்

ஜனநாயகம், சமாதானம், செழுமை, மகிழ்ச்சியான நாடு தொடர்பான தொலைநோக்கு தொடர்பாகவும் நம்பிக்கை கொண்டுள்ளோம். அனைவருக்கும் உயர் தரமான வேலைவாய்ப்பு மற்றும் செழுமையான இலங்கை. இந்து-பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை கேந்திர நிலையமாக செயற்பட வேண்டும் என்பது எம் எதிர்பார்ப்பு.

ஒரு தூதுவராலயம் என்ற அடிப்படையில், வர்த்தக வசதி தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் மூலமாக செழுமையை உறுதிப்படுத்த முனைகின்றோம். உயர் நிபுணத்துவ அறிவுரைகள் மற்றும் நுண்ணறிவு மூலமாக வர்த்தக வெளிப்படுதன்மை, சட்டநெறிகள், துரிதமான சரக்கு பரிமாற்றம் மற்றும் பயிற்சி என கடந்த 60 வருடங்களாக அபிவிருத்தியில் வழங்கிவரும் பங்கினை மேம்படுத்த முனைகின்றோம். எமது மில்லேனியம் சாலன்ஞ் கோப்பரேஷன் அங்கம் இலங்கை மக்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலாக உள்ளது. இரு நாடுகளினதும் இராணுவம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் அமைப்பினர் இடையே பலமான மற்றும் வளர்ந்து வரும் பாதுகாப்பு தொடர்பான நல்லுறவு காணப்படுகின்றது. கொமர் (Komar) மற்றும் ஸ்டார் (Star) நிறுவனங்களை நம்புவதாலும், இங்குள்ள பணியாளர்களை நம்புவதாலும், இந்த அரசாங்கம் மற்றும் மக்கள் அடைய நினைக்கும் இலக்கை நம்புவதாலும், நாம் பல விடயங்களில் இணைந்து செயற்படுகின்றோம்.

இது ஒரு அற்புதமான நாள். எனக்கு மிக மகிழ்ச்சியாக உள்ளது.

நான் நியூ ஜேர்சியை சேர்ந்தவர் அல்ல. நான் வேர்ஜினியா பிரதேசத்தைத் சேர்ந்தவர். சற்று கடற்கரை அண்டிய பிரதேசம். ஆயினும் ஒரு அமெரிக்க நிறுவனம் ஸ்டார் (Star) போன்ற அற்புதமான இலங்கை பங்குதாரருக்கு பொறுப்பான தலைமைத்துவம் மற்றும் நட்பான மற்றும் நிலையான பங்களிப்பை வழங்குதனைப் பார்க்க பெருமையாக உள்ளது.

மாண்புமிகு பிரதமரே, நீங்கள் இங்கு வருகை தந்திருப்பது பெருமையளிக்கின்றது.

வெற்றிகரமான இந்த நாளிற்காக கடின உழைப்பை மேற்கொண்ட அனைவருக்கும், அமெரிக்க தூதுவராலய பணியாளர்கள் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் நன்றி.